அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் கம்பனி - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2024 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் மத்திய தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனியின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 சிறிய மற்றும் மத்திய அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட:டு நியமங்களுக்கு இணங்கியிருக்காமை

உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கம்பனிக்குரிய காணியில் வதியும் அத்துமீறிய குடியிருப்பாளர் ஒருவருக்கு இணக்க உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 6,000,000 தொகையான நட்டஈடு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.10 ஆம் பிரிவுக்கு முரணாக மூலதனமாக்கப்பட்டிருந்த காரணத்தால், மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், எஞ்சிய குடியிருப்பாளர்களுக்கு இணக்கப்பாட்டின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு வாய்ப்புள்ள ரூபா 18,240,000 பெறுமதி	பணிப்பாளர் சபையின் முடிவின்படி, இந்த நிலத்தில் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஒரு தொகை (offer) முன்மொழியப்பட்டுள்ளதாகவும், அதனை ஒப்பந்தத்தின்படி பணம் செலுத்த வேண்டிய கடப்பாடு (obligation) இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நிமயத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிகழத்தக்க பொறுப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் 21 ஆம் பந்தியின் 21.12 மற்றும் 21.15 இன் பிரகாரம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது ரூபா 5,823,260 தொகையான நலன்புரிச் செலவினங்கள் மற்றும் ஏனைய ஒதுக்கீடுகள் நலன்புரி செலவினங்கள் கணக்கு செலவு வைக்கப்பட்டு, ஏனைய ஒதுக்கங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் செலவினங்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 திசெம்பர் 18 ஆந் திகதி சேவை மதிப்பீட்டிற்காக 5 பவுண்கள் தங்கம் வாங்கப்பட்டாலும், அதற்கான சேவை மதிப்பீட்டு விழாக்கள் நடத்தப்படாததால், அதை ஒரு செலவாகக் கணக்கிட முடியாது என்றும், எதிர்கால சேவை மதிப்பீட்டிற்கு 5 பவுண்கள் தங்கம் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவை நிறுவனத்தின் சொத்தாக இருப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	செலவுகள் மற்றும் ஒதுக்கீடுகள் துல்லியமாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டினுள் ரூபா 4,012,120 கூட்டுத்தொகையான 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் கடன் பட்டோர் செலவின பெறுமதிகள் மற்றும் மிகை செலுத்தல்கள் சரியாக இனங்காணப்படாது மீளாய்வாண்டின் போது நானாவித வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியால் அதிகரித்து மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வாடிக்கையாளர்கள் நேரடியாக வங்கிக் கணக்கில் செய்த அடையாளம் காணக்கூடிய வைப்புத்தொகைகளை சரியாகக் கண்டறிந்த பிறகு, அடையாளம் காண கடினமாக இருக்கும் வைப்புத்தொகைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட அதிகப்படியான பெறுவனவுகள் 2024 ஆம் ஆண்டில் நானாவித வருமானக் கணக்கில் செலவு	கடன் கொடுத்தோர் செலவு மதிப்புகள் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

		வைக்கப்பட்டுள்ளன.	
(இ)	2023 ஆம் ஆண்டுக்குரியதாக ரூபா 1,967,962 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,309,283 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	ரூபா 1,309,282 இணக்குகின்றமை.	காலப்பகுதிக்குரிய வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஈ)	கடந்த வருடத்தில் ரூபா 136,536 ஆன தரகுச் செலவினம் மற்றும் ரூபா 439,860 தொகையான வீதவரிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 576,396 அனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் இலாபம் அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இணக்குகின்றமை.	மீளாய்வாண்டுக்குரிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது ரூபா 340,000 தொகையான பாராமரிப்பு செலவினம் மற்றும் ரூபா 198,176 தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் கடந்த வருடத்தின் செலவினங்களாக இனங்காணப்பட்டிருந்தமை மற்றும் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 146,662 இனால் குறைவாக கணிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 684,838 இனால் குறைத்தும் மற்றும் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	இணக்குகின்றமை.	மீளாய்வாண்டுக்குரிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

(ஊ)	மீளாய்வாண்டின் டீசல் கொள்வனவு கிரயம் பெறுமதி சேர் வரியுடன் கணக்கிடப்பட்ட காரணத்தால் ரூபா 700,718 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இணக்குகின்றமை.	பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் மற்றும் 1999 ஏப்ரல் 07 ஆந் திகதிய 1074/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் கம்பனியின் நிதி அறிக்கையிடல் சட்டம் இலங்கை கணக்கீட்டு நியமமாக காணப்பட வேண்டிய போதிலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நிமயம் கம்பனியினால் நிதி அறிக்கையிடல் சட்டமாக பின்பற்றப்பட்டிருந்தது.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நிமயத்தின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் நிதி அறிக்கையிடல் சட்டகம் தீர்மானிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்லப்பட்டிருந்தது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட வேண்டும்.

1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	விடயம்	நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி	துணை அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி	வித்தியாசம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
		ரூபா	ரூபா	ரூபா		
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூறறில் வியாபாரக் கடன் பட்டோர் பெறுமதி ரூபா 761,200,999 ஆக காணப்பட்டதுடன், கணக்காய்வுக்கு	761,200,999	763,068,837	1,867,838	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய கடன் பட்டோர் பட்டோலைகளின் மீதிகளுக்கிடையே வேறுபாட்டுக்காக மாதாந்தம் மற்றும்	நிதிக்கூற்றுக்களில் காணப்படும் வியாபார கடன் பட்டோரின் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் கூட்டுப் பெறுமதிகள் இணக்கம் செய்யப்பட

	வழங்கப்பட்ட பட்டோலைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 763,068,837 ஆனமையால் ரூபா 1,867,838 ஆன வேறுபாடு நிலவியது.				ஆண்டின் இறுதியில் இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றமையும், அந்த வேறுபாடுகள் அதற்கடுத்த மாதங்களில் உரிய மீதிகளுடன் இணக்கம் செய்யப்படுகின்து என்பது.	வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் பத்திரிகை பங்களிப்பின் அடிப்படையில் விற்பனை வருமானம் ரூபா 20,929,229 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்கீட்டு கட்டமைப்பினுள் அந்த பெறுமதி ரூபா 21,693,248 ஆன மீதியாக காணப்பட்டமையால் ரூபா 764,018 ஆன வேறுபாடு நிலவியது.	20,929,229	21,693,248	764,018	கணக்கீட்டு கட்டமைப்பில் பதிவுசெய்யப்பட்ட சந்தா விற்பனை வருவாய்க்கும் (Subscription) தொடர்புடைய இயக்க கணினி கட்டமைப்புக்கும் (Sp Solutions) இடையே ரூபா 764,018 வித்தியாசத்தை கணக்கீட்டு கட்டமைப்பு காட்டுகிறது என்பதுடன், அந்த வேறுபாட்டிற்கான காரணங்களின் அடிப்படையில் இணக்கக்கூற்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	செய்தித்தாள் விற்பனை வருமானத்திற்கும் தொழிற்பாட்டு கட்டமைப்பின் மதிப்புக்கும் இடையிலான வேறுபாடுகளை பங்களிப்பு அடிப்படையில் கண்டறிந்து இணக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் போது வெளிவாரி அச்சீட்டு பணிகளுக்காக கம்பனியின் வணிக அச்சீட்டு பிரிவிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 25,814,282 தொகையும், பத்திரிகை விற்பனை முகவர்களிடம் பெற வேண்டிய	கடன் நிலுவைகளை வசூலிப்பதற்கான செயல்முறைக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	பெற வேண்டிய கடன்களை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	ரூபா 12,120,068 தொகை மற்றும் பிரதிநிதித்துவத்தை இரத்துச் செய்த பத்திரிகை முகவர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 41,773,384 தொகையும், சட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தக்கூடிய கடன் பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 75,849,393 தொகையும், கம்பனியின் அனுசரனையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த பத்திரிக்கைகள் மற்றும் மாத சஞ்சிகைகளுக்காக பெற வேண்டிய ரூபா 14,244,992 தொகை மற்றும் திவி செகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு பத்திரிக்கை விநியோகிப்பதற்காக பெற வேண்டிய ரூபா 2,209,560 ஆக ரூபா 172,011,679 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட முடியாது காணப்பட்டது.		
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில், ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லல், சேவையை முடிவுறுத்தல் அல்லது இறப்பு காரணமாக 01 முதல் 26 ஆண்டுகள் வரை நிறுவனத்தை விட்டு வெளியேறிய 59 ஊழியர்களின் அறவிடப்படாத நிலுவைத் தொகையான ரூபா 7,970,214 இனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது, இவ்வாறான நிலுவை பணத்தை அறவிடுவதற்காக இடர் கடன்களுக்கான உத்தரவாததாரர்களை வைத்திருப்பது மற்றும் நடப்பு மாதத்தின் வருகையைக் கருத்தில் கொண்டு மாதாந்த சம்பள தயாரிப்பு செயல்முறையை நிறுத்துவது போன்ற உள்ளக கட்டுப்பாட்டு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.	பெற வேண்டிய கடன்களை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் உறுதிப்படுத்தல் கடிதங்களை அனுப்பிய ரூபா 519,609,586 தொகையான 663 கடன்பட்டோர், ரூபா 456,168,104 மீதியை கொண்ட 606 கடனாளிகள் பதிலளிக்காத காரணத்தால் நிலுவையில் உள்ள தொகையில் 91 சதவீதம் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், பதிலளித்த கடன் பட்டோரில், ரூபா 16,725,813 மீதியை கொண்ட 32 கடன்பட்டோர் மட்டுமே கடன்பட்டோர் மீதிகளுடன் இணங்கியிருந்ததுடன், இங்காத	சில கடன்பட்டோர் நிலுவையை உறுதிப்படுத்த அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், தொடர்புடைய கடன்கள் 2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் தீர்க்கப்பட்டன. 2024 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக நிறுவனத்தின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள	மீதி உறுதிப்படுத்தல்களை கணக்கு நிலுவைகளுடன் ஒப்பிட வேண்டும். கடன்களை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,720,038 ஆகும். இந்த 25 இணக்கமற்ற கடன் பட்டோரின் 08 பேர் மட்டும மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக ரூபா 4,063,390 தொகையை காசோலை மூலம் செலுத்தியுள்ளனர். அதன்படி, பதிலளித்த கடனாளிகளில் 56 சதவீதம் பேர் கடன் பட்டோர் மீதிகளுடன் உடன்பட்டனர் மற்றும் 44 சதவீதம் பேர் உடன்படவில்லை.	கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கடன் பட்டோரால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டிற்கான முக்கிய காரணம், அந்த திகதியில் வழியில் காணப்பட்ட காசோலைகள் ஆகும். இந்த காசோலைகள் நிறுவனத்திற்கு பெறப்படும் வரை தொடர்புடைய கடன் பட்டோர் மீதியை தீர்க்க முடியாது என்றும், காசோலைகள் பெறப்பட்ட பிறகு தீர்வுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு		இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2015 மே 25 ஆந் திகதிய PED/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி	மாதாந்தம் போக்குவரத்துப் படிகளை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு அல்லது சாரதிப் படியையேனும் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும், மீளாய்வாண்டின் வாகனப் படிகளுக்கு மேலதிகமாக ரூபா 10,000 முதல் ரூபா 35,000 வரை சாரதிப் படிகளாக ரூபா 6,425,600 வழங்கப்பட்டிருந்தது.	கம்பனி பொது முயற்சிகள் சுற்றறிக்கையை பின்பற்றும் தேவைப்பாடு இல்லை என்பதும், கம்பனியின் போக்குவரத்துப் படிகளை வழங்கும் நடைமுறைக்கமைய உரிய படிகள் வழங்கப்பட்டுள்ளது என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 27 (2)(ஐ) ஆம் பிரிவு	2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 76,810,224 கூட்டுத்தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் தாமதக் கட்டணங்களுக்காக மிகை அறவீடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	இதற்காக தொழில் திணைக்களம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது, மேலும் இது தொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் விண்ணப்பத்தை (Write Application) தாக்கல் செய்ய பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது.	ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.8 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கம்பனியால் பணிக்கொடை அளவானது ரூபா 5,000,000 இனை விஞ்சும் போது செலுத்த வேண்டிய மொத்த பணிக்கொடைத் தொகையின் அடிப்படையில் (12%) நிறுத்தி வைப்பதற்கு நேர்ந்திருந்த போதிலும், நிறுவனத்தினால் வரி சுழற்சியின் பிரகாரம் ரூபா 358,360 அளவானது நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ஊழியர் ஒருவரின் பணிக்கொடை தொகையில் ரூபா 958,360 நிறுத்தி வைக்கப்பட்டமையால், ரூபா 600,000 குறைத்து ஊழியருக்கு செலுத்தப்பட்டிருந்தது.	சம்பந்தப்பட்ட ஊழியருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் பங்களிப்புத் தொகை அடங்கிய அறிக்கை கிடைத்ததும், நிறுத்தி வைக்கப்பட்ட அதிகப்படியான தொகையை சம்பந்தப்பட்ட ஊழியருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கூடுதலாக நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ஊழியருக்கு செலுத்தப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,785,000 ஆன இலாபமாக இருந்ததுடன் அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 31,365,000 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 7,580,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக கடந்த வருடத்திற்கு ஒப்பாக பத்திரிக்கை விளம்பர வருமானம் 6 சதவீதம் எனும் சிறிய அளவால் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானங்கள் 55 சதவீதத்தினால் மற்றும் வணிக அச்சீட்டு வருமானம் 41 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

2.2 விகிதப் பகுப்பாய்வு

விகிதம்	2024	2023
நடைமுறை சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை)	3.46	3.17
விரைவுச் சொத்து விகிதம் (தடவைகள் எண்ணிக்கை)	2.60	2.54
மொத்த இலாப விகிதம் (%)	58%	56%
தேறிய இலாப விகிதம் (%)	1%	2%
கடன் மூலதன் விகிதம் (தடவைகள்)	0.82	0.87

மீளாய்வாண்டின் கம்பனியின் மொத்த இலாப விகிதம் 2 சதவீதத்தினாலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடப்படும் போது அதிகரித்திருந்ததுடன், தேறிய இலாப விகிதம் 1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2008 திசெம்பர் மாதம் கம்பனியால் இலங்கை பத்திரிகை லிமிடட்டின் 1200 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,200,000 பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 31 வரை எந்த பிரதிபலன்களும் கிடைத்திருக்கவில்லை.	வெகுசனத் தொடர்பு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை பத்திரிகை கம்பனி 2014 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்ற ஒரு கம்பனியாகும்.	நிறுவனத்தின் நோக்கங்களுக்கு இணங்க பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	1985 ஆம் ஆண்டின் போது ஆதன அபிவிருத்தி தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்காக லேக்ஹவுஸ் புரப்பேட்டி டிவலொப்மென்ட் (தனியார்) கம்பனி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் எந்த செயற்பாட்டு நடவடிக்கையும் இடம்பெற்றிருக்கவில்லை.	லேக்ஹவுஸ் புரப்பேட்டி டிவலொப்மென்ட் (தனியார்) கம்பனி தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத கம்பனி என்பது.	கம்பனியின் நோக்கங்கழள அடையக்கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	வெகுசன ஊடக அமைச்சுடன் 2023 யூன் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 3(i) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கம்பனியின் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒட்டுமொத்த பதவியணி 850 வரையிலும் குறைத்தல் கம்பனியின் எதிர்பார்ப்பாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 889 ஆகும். உடன்படிக்கையின் 3(ii) பிரிவின் பிரகாரம், பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையொன்று உருவாக்கப்பட வேண்டிய போதிலும், 2025 மார்ச் 31 ஆந்	வெகுசன ஊடக அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கம்பனியின் ஒட்டுமொத்த பதவியணி 850 ஆக குறைப்பதற்கு கம்பனி உத்தேசித்திருந்ததாகவும், அந்த காலப்பகுதியினுள் இராஜினாமா நடைமுறையின் ஊடாக நிறுவனம் எதிர்பார்த்த எண்ணிக்கையான ஊழியர்கள் விலகியிராமையால் அந்த உத்தேச மட்டத்தினை அடைய முடியாதுள்ளமை.	உடன்படிக்கையின் பிரகாரம் செய்றபட வேண்டும்.

	திகதி கணக்காய்வு திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(இ)	2021 திசெம்பர் 21 ஆந் திகதிய அமப/21/2112/316/032-1 ஆம் இலக்கமுடைய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிராகாரம் நிறுவனங்களின் அனைத்து வர்த்தக விளம்பரங்களுக்கும் வரையறுக்கப்பட்ட அசோஸியேட்டட் நிவுஸ் பேப்பர்ஸ் கம்பனியின் அறிவிப்பு வெளியிடப்படல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், பின்புலத்தில் அரசின் விளம்பர வருமானங்களும் உள்ளடங்களாக ஊக்குவிப்புப் படிகளுக்காக இலக்குகள் வழங்கப்பட்டிருந்ததுடன், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் கணக்குகள் (வருமானங்கள்) ஆகிய பிரிவுகளில் ஊழியர்களுக்கு மாத்திரம் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 24,258,043 ஆன ஊக்குவிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.	தொடர்புடைய அமைச்சரவை ஒப்புதலின்படி, லேக் ஹவுஸ் செய்தித்தாள்களில் அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் விளம்பரங்களை 100% வெளியிடவும், மற்ற வணிக விளம்பரங்களை வெளியிடும்போது ஊடக விளம்பர மதிப்பீட்டில் குறைந்தது 25% மதிப்புள்ள விளம்பரங்களை லேக் ஹவுஸ், தேசிய தொலைக்காட்சி, சுயாதீன தொலைக்காட்சி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, லேக் ஹவுஸ் விளம்பர முகாமையாளர்கள் மற்றும் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் அரசு நிறுவனங்களிடமிருந்து வணிக விளம்பரங்களைப் பெறுவதற்கு வலுவான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இந்த அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு, 2025 ஜனவரி மாதம் முதல் விளம்பர ஊக்குவிப்புக் படிகரள வழங்கும் முறையை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஊக்குவிப்பு படிகள் வழங்கும் முறை ஊழியர்களின் உந்துதலை அதிகரிக்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கம்பனியால் 2024 திசெம்பர் 10 ஆந் திகதி அன்று தனியார் ஊடக நிறுவனத்துடன் செய்துகொண்ட மீள் விற்பனை ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்த மதிப்பை விஞ்சி ரூபா 165,720 ஆன விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான	எதிர்காலத்தில் இந்த தாமதங்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	உடன்படிக்கைக்கு இணங்க வேண்டியதுடன், செல்லுபடியான காலம் நிறைவடைவதற்கு முன்னர் புதிய உடன்படிக்கை

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொள்ளப்பட்ட மீள் விற்பனை ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்திருக்காததுடன், அந்த உடன்படிக்கையின் செல்லுபடியான காலம் நிறைவடைந்த பின்னர் ஒரு புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. பின்னர், கம்பனியால் 2024 ஜனவரி 01 முதல் 2024 திசெம்பர் 31 வரையிலான 05 மாதங்களுக்குப் பிறகு, அதாவது 2024 மே 30 அன்று ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திடப்பட்டது.		கைச்சாத்திடப்பட வேண்டும்.

3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஒரு வீடமைப்புத் திட்டத்தினை நிர்மாணிப்பதற்காக 1985 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்து 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 733,000,000 தொகைக்கு மீள மதிப்பீடு செய்யப்பட்ட ஹோகந்தர பிரதேசத்தில் அமைந்துள்ள 08 ஏக்கர் காணி கொள்வனவு செய்த திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது.	ஹோகந்தர பிரதேசத்திலுள்ள அந்த காணியை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு பல்வேறு முதலீட்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க வினைத்திறனாக முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் கம்பனியின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் 500 மெ.தொன் அச்சீட்டு தாள்களை கொள்வனவு செய்வதற்காக பெறுகை அழைப்பின் போது 02 வழங்குநர்களிடமிருந்து 400 மெ.தொன்கள் படியாக 800 மெ.தொன்களுக்காக 575 டொலர் மற்றும் 565 டொலர் எனுமாறு 02 கூறுவிலைகளுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், ஆகக்	500 மெ.தொன்களுக்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், நிலவிய இருப்பின் நிலைமை, அச்சீட்டு தாள்களின் பயன்பாடு அதிகரித்தமை மற்றும் விலைகள் சிறந்த நிலையில காணப்பட்டமை (குறைவான விலைகள்) ஆகிய விடயங்களை கருத்திற்கொண்டு 800 மெ.தொன் கட்டளையிடுவதற்கு (Procurement Committee)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறைந்த விலைக்கேள்வியாளரின் செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்ள பெறுகைகள் குழு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தீர்மானித்துள்ளது. கட்டளையிடப்பட்ட பெறுகைக்குரிய செயலாற்றல் பிணைமுறியொன்று வழங்கப்படாதிருந்த போதிலும், இதுவரையிலும் அச்சீட்டு தாள்களின் கட்டளைக்குரிய செயலாற்றல் அடையப்பட்டிருக்கவில்லை என்பது.

3.6 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
2017 ஆம் ஆண்டின் போது பெண் மனிதவள ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 3,150,000 செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட மனிதவள முகமைத்துவ மற்றும் அதனுடன் தொடர்புடைய 07 கொள்கைகளில் 06 கொள்கைகளுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிராததுடன், மீண்டுமொரு தடவை அந்த ஆலோசகர் இணைத்துக்கொள்ளப்பட்டு 2022 நவம்பர் முதல் 2023 யூன் வரையிலும் ரூபா 1,151,750 மதியுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இந்த மனிதவள ஆலோசகரின் சேவையை பெற்றுக்கொண்ட காலப்பகுதியிலேயே 2021 திசெம்பர் 23 ஆந் திகதிய Chartered Institute of Personnel Management Sri Lanka திருத்தப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் 2022 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை உருவாக்கி நிறைவு செய்வதற்கு Chartered Institute of Personnel Management Sri Lanka உடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அந்த பணிக்காக ரூபா 1,300,000 ஆன கிரயம் மேற்கொள்ள கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. இணங்கிய கிரயத்தில் ரூபா 1,137,500 தொகை 2024 திசெம்பர் 31 ஆந்	2016 ஏப்ரல் 25 ஆந் திகதி முதல் பெண் மனிதவள ஆலாசகர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு வழங்கப்பட்ட தொடர்புடைய நிபந்தனைகள் **(Terms of Reference)** பிரகாரம் மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகளை தயாரித்தல் அவருக்கான விடயமல்ல என்பதும். அவரால் மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் 7 கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு கொள்ளை அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 நவம்பர் 08 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் அவர் மீண்டும் மனிதவள ஆலோசகராக ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அதன் போது அவருக்கு வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய நிபந்தனைகள் **(Terms of Reference)** பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான ஒப்படைப்பொன்று இடம்பெறவில்லை என்பது **Chartered Institute of Personnel Management of Sri Lanka** நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட	ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

திகதியளவில் உரிய நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவாறு கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியணியை தயாரிக்கும் பணிப்பொறுப்பு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறையை நிறுவனத்தின் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் திருத்தி நடைமுறைப்படுத்த உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன